අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2025 (2026)
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை - 2025 (2026)
General Certificate of Education (Ordinary Level) Examination - 2025 (2026)

# புவியியல்
## භූගෝල විද්‍යාව - Geography

**பயிற்சி வினாத்தாள்**
**අනුහුරු ප්‍රශ්න පත්‍රය**
**Practice Paper**



**வினாப்பத்திரம் - I, II | Question Paper - I, II | (தமிழ் மொழி மூலம்)**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு – தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
Ministry of Education, Higher Education & Vocational Education - National Languages and Humanities Branch

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education & Vocational Education**

| 61 | T | I, II |
|---|---|---|

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை பயிற்சி வினாப்பத்திரம் - 2025 (2026)**
අ.පො.ස. (සාමාන්‍ය පෙළ) විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2025 (2026)
**G. C. E. Ordinary Level Examination – practice paper - 2025 (2026)**

භූගෝල විද්‍යාව I, II
**புவியியல் I, II**
**Geography I, II**

*පැය තුනයි.*
*மூன்று மணித்தியாலம்*
*Three Hours*

*අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.*
*மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்*
*Additional Reading Time – 10 minutes*

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## புவியியல் I

* **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**
* ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா வினாக்களுக்கும்** இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக.

- **தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1 புவிமேற்பரப்பிலிருந்து 5-6 கிலோமீற்றர் உயரத்திற்குள் காணப்படும் படையில், மொத்த வளி உள்ளடக்கத்தில்…………………… காணப்படுகிறது. (18%/50%/97%)

2. தென்னை செய்கையினை விருத்தி செய்வதற்கான தென்னை ஆராய்ச்சி நிறுவனம். ………………….பிரதேசத்தில் அமைந்துள்ளது. (எம்பிலிபிடிய / ரன்ன / பத்தலகொட)

3. ''கைத்தொழில் கிராமங்கள்''……………………கைத்தொழில் விருத்திக்காக உருவாக்கப்பட்டவையாகும். (உற்பத்தி/ஏற்றுமதி /குடிசை )

4 கரையோரத்திலிருந்து கடல்மைல் 24-200 வரையான வலயம்…………………….என அழைக்கப்படும். (தனித்துவ பொருளாதார வலயம் / நீர்ப்பிரி வலயம் / வெளிப்புற வலயம்)

5. தென்னாசிய பிராந்தியத்தில் மிக உயர்ந்த மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணை கொண்ட நாடு ………………..ஆகும். (இந்தியா / இலங்கை / மாலைத்தீவுகள்)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் “ச” ஐயும், பிழையாயின் “பி” ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6. இலங்கையில் தற்போது இரண்டு சுரங்கங்களில் மாத்திரமே காரியம் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. (ச / பி)

7. பருவகால மாற்றங்களினால் இடைவெப்ப வலய பிரதேசங்களின் வெப்பநிலை கூடி,குறைகின்றது. (ச / பி)

8. ஒவ்வொரு கணியத்திற்கும் நிலையான இரசாயன சேர்க்கையொன்று காணப்படுகிறது. (ச / பி)


9. பாறைகளின் அடர்த்தி, கட்டமைப்பு மற்றும் அமைவிடம் என்பவற்றின் அடிப்படையில் புவியோடானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. (ச / பி)

10. பௌதீக வாழ்க்கைப் பண்பு சுட்டெண் என்பது ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பழைய குறிக்காட்டியாகும். (ச / பி)

- **11 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. இலங்கையின் சுற்றுலா அதிகார சபையினால் பிரதான சுற்றுலா வலயங்கள்…………………….. இனங்காணப்பட்டுள்ளன.
12. கிரனைட் பாறையின் உருமாற்றத்தினால்…………………..பாறைகள் உருவாகின்றன
13. ……………………..,சிறப்புத் தேர்ச்சி, தொழிநுட்ப அபிவிருத்தி என்பன பொருத்தும் கைத்தொழிலின் அடிப்படையாகும்.
14. ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் வாழும் மக்கள் தொகை……………….என அழைக்கப்படுகிறது.
15. மூடி பகுதியில் செயற்படுகின்ற……………………..விளைவின் காரணமாக புவித்தகடுகள் நகருகின்றன.
16. சமுத்திரங்களுடன் தொடர்புபட்ட, முழுமையாக அல்லது பகுதியளவில் நிலத்தால் சூழப்பட்ட உவர்நீர்ப்பிரதேசம்…………………….. என அடையாளப்படுத்தப்படும்.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 17 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




**17**. 2023 ஆம் ஆண்டில் அதிகளவிலான சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்த மாதம்………… ஆகும்.

**18**. 2025 ஆம் ஆண்டில் குறைந்தளவிலான சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்த மாதம்…………..ஆகும்.

**19**. 2023 மற்றும் 2025 ஆண்டுகளின் சுற்றுலா பிரயாணிகளின் வருகைகளுக்கிடையிலான அதிகபட்ச வேறுபாடு………………மாதத்தில் அவதானிக்கப்படுகிறது.

- **20 – 25 வரையுள்ள வினாக்களில் ‘அ’ இ ‘ஆ’ மற்றும் “ஆ” என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. ‘அ’ நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப ‘ஆ’ நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**20**.

| 'அ'<br>**சனத்தொகை கூடிய வலயம்** | 'ஆ'<br>**நாடு** |
|---|---|
| 1. தென்னாசியா | A. இந்தோனீசியா |
| 2. தென்கிழக்காசியா | B. சீனா |
| 3. கிழக்காசியா | C. ரஷ்யா |
| | D. பாகிஸ்தான் |

(1) A,D,B (2) B,C,A (3) C,A,B (4) D,A,B (…….)

**21.** 'அ' 'ஆ'

| கனிய வகை | உதாரணம் |
|---|---|
| 1. எரிபொருள் கனியம் | A. இரும்பு |
| 2. உலோகக் கனியம் | B. காரியம் |
| 3. உலோகமல்லாத கனியம் | C. சுண்ணக்கல் |
| | D. நிலக்கரி |

(1) B,A,D (2) C,B,A (3) D,A,C (4) D,B,C (…….)

**22.**

| 'அ' நதி | 'ஆ' ஆரம்பம் |
|---|---|
| 1. றைன் | A. ஊற்றிலிருந்து |
| 2. நைல் | B. உருகிய பனியிலிருந்து |
| 3. தேம்ஸ் | C. ஏரியிலிருந்து |
| | D. மலைபகுதி ஊற்றிலிருந்து |

(1) A,C,B (2) B,C,A (3) C,B,D (4) D,C,A (…….)

**23.**

| 'அ' சுற்றுலா வலயம் | 'ஆ' நகரம் |
|---|---|
| 1. புராதன நகரங்களின் வலயம் | A. கண்டி |
| 2. கிழக்கு கரையோரம் | B. ஹிக்கடுவை |
| 3. மத்திய மலைநாடு. | C. நுவரெலியா |
| | D. கதிர்காமம் |

(1) A,D,C (2) B,D,C (3) D,B,A (4) D,B,C (…….)

**24.**

| 'அ' கவசத்தகடு | 'ஆ' தீவு |
|---|---|
| 1. இந்தோ-அவுஸ்ரேலியா | A. சுமாத்ரா |
| 2. பசுபிக் | B. ஹவாய் |
| 3. வட அமெரிக்கா | C. அந்தமான் |
| | D. போக்லண்ட் |

(1) A,B,D (2) B,C,A (3) C,A,D (4) D,C,B (…….)

**25.**

| 'அ' வன சீவராசி ஒதுக்குகள் | 'ஆ' பரம்பல் பிரதேசம் |
|---|---|
| 1. இயற்கை ஒதுக்குகள் | A. வேதகிரியா கந்த |
| 2. வன ஒதுக்குகள் | B. நாகியாதெனியா |
| 3. தேசிய பூங்காக்கள் | C. புத்தல |
| | D. யால |

(1) A,B,C (2) B,C,D (3) C,A,B (4) D,C,A (…….)

- **26 தொடக்கம் 37 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான/ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**26.** உலக உற்பத்தி கைத்தொழிலுடன் தொடர்புடைய சந்தை சார்ந்த பிரச்சினையை காட்டுவது.
(1) அதிக போட்டி காரணமாக பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படுதல்.
(2) பல்தேசிய கம்பனிகளின் செல்வாக்கிற்கு உட்படுதல்.
(3) தொழிலாளர்களுக்கான செலவு அதிகரித்தல்
(4) நவீன இயந்திரங்களின் பயன்பாட்டினால் ஏற்படும் வேலைவாய்ப்பின்மை (…….)

**27.** இலங்கையின் தனித்துவ பொருளாதார வலயத்திற்குள் மேற்கொள்ளப்படும் மீன்பிடி வகை.

(1) உவர்நீர் மீன்பிடி (3) நன்னீர் மீன்பிடி
(2) பல்லின மீன்பிடி (4) கடல் நீர் மீன்பிடி (…….)

**28.** இலங்கையில் பெருமளவு நிலப்பரப்பில் நெற்பயிர்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டம்.
(1) நுவரெலியா (2) பொலன்னறுவை (3) குருநாகலை (4) அனுராதபுரம் (…….)

**29**. மோட்டார் வாகன உற்பத்தி கைத்தொழிலின் முக்கிய போக்கினை குறிப்பிடும் விடை.
(1) குறைந்த முதலீட்டுடன் ஆரம்பிக்க முடிதல்
(2) பல நாடுகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளுதல்
(3) ஐரோப்பிய நாடுகள் மாத்திரம் உற்பத்தியில் ஈடுபடுதல்
(4) உற்பத்தி வழிமுறைகள் மாற்றமடைய நீண்டகாலம் எடுத்தல் (…….)

**30**. தேயிலை உற்பத்தியில் முன்னணியில் திகழும் தென்னமெரிக்க நாடொன்று.
(1) பிரேசில் (2) சிலி (3) உருகுவே (4) ஆர்ஜெந்தீனா (…….)

**31**. ஆபிரிக்க கண்டத்தில் இரண்டாம் நிலை சனத்தொகை மையமாக காணப்படும் பகுதி.
(1) கொங்கோ பள்ளத்தாக்கினை சூழவுள்ள பகுதி
(2) மத்திய சகாரா பகுதி
(3) எகிப்தின் கெய்ரோ சூழவுள்ள பகுதி
(4) ரியோடி ஜெனீரோ நகரை சூழவுள்ள பகுதி (…….)

**32**. இலங்கையில் முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெற்றது.
(1) 1871 ( 2) 1881 (3) 1981 (4) 2012 (…….)

**33**. நாடொன்றின் அபிவிருத்தி செயன்முறையில், மாற்று வளங்களை தேடவேண்டிய தேவை ஏற்படுவதற்கான காரணம்.
(1) புவி வெப்பமடைதல் அதிகரித்து வருதல்
(2) ஓசோன் படை தேய்வடைந்து வருதல்.
(3) வளப்பற்றாக்குறை ஏற்படுதல்
(4) வளங்கள் பொருளாதார ரீதியாக மதிப்பு வாய்ந்ததாக இருத்தல் (…….)

**34.** 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பெரும் அழிவினை ஏற்படுத்திய பாரிய காட்டுத்தீ பரவியது.
(1) ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலம்
(2) கனடாவில் அல்பர்ட்டா
(3) அமேசன் காட்டுப்பிரதேசம்
(4) மத்திய அவுஸ்ரேலிய பிரதேசம் (…….)

**35.** 1:50000 இடவிளக்கப்படத்தின் வெளி எல்லையின் மேல் ஓரத்தில் உள்ளடக்கப்படாத தகவல்.
(1) படத்தின் வகை (3) படத்தின் அளவுதிட்டம்
(2) படத்தின் இலக்கம் (4) படத்தின் பெயர் (……..)

**36.** இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிறுவன கட்டமைப்பு தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A. அனர்த்த முகாமைத்துவத்திற்கென ஒரு தனியான அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
B. பணிப்பாளர் நாயகம் ஒருவரின் தலைமையின் கீழ் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
C. கிராமிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன
D. அரசியல் தலைமைத்துவத்தினூடாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுக்கமைவாக,
(1) A,B, மற்றும் D மாத்திரம் சரியானவை (3) B மற்றும் C மாத்திரம் சரியானவை
(2) A மற்றும் D மாத்திரம் சரியானவை (4) B மற்றும் D மாத்திரம் சரியானவை (……..)

**37**. இலங்கையில் கட்டப்படுகின்ற படகுகள் ஏற்றுமதி செய்யப்படும் ஐரோப்பிய நாடொன்று.

(1) பிரான்ஸ் (2) நெதர்லாந்து (3) இத்தாலி (4) நோர்வே (….....)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 38 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. இயற்கை அனர்த்தங்கள்
2. மனித நடவடிக்கைகள்

B - 1. ஆயுள் எதிர்பார்ப்பு
2. வயது மூப்படைதல்

C - 1. பொருள் உற்பத்தி
2. பொருளின் விலை அதிகரிப்பு

D – 1. ஏற்றுமதி
2. இறக்குமதி

**38**. இரண்டாவதன் அதிகரிப்பு, முதலாவதன் வீழ்ச்சிக்கு காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

**39**. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிரகப்பிற்கு காரணமான சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

**40.** இரண்டாவதன் தாக்கம் முதலாவதன் தீவிரமடைதலுக்கு காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…….)

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education & Vocational Education

| 61 | T | I, II |
|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - பயிற்சி வினாப்பத்திரம்- 2025 (2026)
G. C. E. Ordinary Level Examination - practice paper - 2025 (2026)

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II |
| புவியியல் | I, II |
| Geography | I, II |

புவியியல் II

- ❖ இவ்வினாத்தாள் I II எனும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ❖ பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்.

## பகுதி - I

1. **(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக.**

- தொடக்கம் (v) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) Ⓐ எழுத்தினால் காட்டப்படும் எல்லை யாது?
(மாகாண எல்லை / மாவட்ட எல்லை / பிரதேச செயலக எல்லை) (1 புள்ளி)

(ii) Ⓑ எழுத்தினால் காட்டப்படுவது.
(நடைபாதை /சிறுவீதி / வண்டி பாதை) (1 புள்ளி)

(iii) Ⓒ எழுத்தினால் காட்டப்படும் வடிகால் அம்சம் யாது?
(கண்டல் நிலம் / ஆற்று வளைவு / சேற்றுநிலம்) (1 புள்ளி)

(iv) Ⓓ எழுத்தினால் காட்டப்படுவது.
(வீதி பாலம் / மதகு/ நடை பாலம்) (1 புள்ளி)

(v) Ⓔ எழுத்தினால் காட்டப்படும் கரையோர அம்சம்.
(முனை /மணற்றடை /குடா) (1 புள்ளி)

(vi) Ⓖ எழுத்தினால் காட்டப்படும் அம்சம் யாது? (1 புள்ளி)

(vii) Ⓗ சதுரத்தினுள் காணப்படும் இரு வணக்கஸ்தலங்களை பெயரிடுக.? (2 புள்ளிகள்)

- படப்பிரதேசம் தொடர்பான கூற்றுக்கள் **(viii)** மற்றும் **(ix)** வினாக்களில் தரப்பட்டுள்ளன. கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் **“ச”** எனவும், பிழையாயின் **“பி”** எனவும் வினாக்களுக்கு எதிரே குறிப்பிடவும்..

(viii) படப்பிரதேசத்தின் நதிப்பள்ளதாக்கிற்கு அருகாமையில் பரந்தளவில் இறப்பர் பயிர்செய்கையை காணமுடிகிறது. (1 புள்ளி)

(ix) Ⓕ எழுத்தினால் காட்டப்படுவது தேசிய ஆள்கூற்று அளியடைப்பாகும். (1 புள்ளி)

**(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக எழுதுவதற்காக உலகப் புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

(i) தாய்வான் -Ⓢ, Ⓣ, Ⓤ
(ii) ஓப் நதி -Ⓜ, Ⓝ, Ⓞ
(iii) கருங்கடல் -Ⓥ, Ⓦ, Ⓧ
(iv) பமீர் மேட்டுநிலம் -Ⓒ, Ⓓ, Ⓔ
(v) சாட் ஏரி -Ⓟ, Ⓠ, Ⓡ **(5 புள்ளிகள்)**


**(இ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கை புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக**

(i) ஏக்காலை -Ⓖ, Ⓗ, Ⓘ -
(ii) நெடுந்தீவு -Ⓐ, Ⓑ, Ⓒ
(iii) சம்பூர் -Ⓓ, Ⓔ, Ⓕ
(iv) ஓக்கம்பிடிய -Ⓞ, Ⓟ, Ⓠ
(v) ஜின் கங்கை -Ⓛ, Ⓜ, Ⓝ **(5 புள்ளிகள்)**

## பகுதி II

**02.** (i) பின்வரும் வரைபடத்தின் **A** மற்றும் **B** அம்சங்களை பெயரிடுக. **(2 புள்ளிகள்)**




(ii) கீழே தரப்பட்டுள்ள தீவுகள் அமையபெற்றுள்ள கடல் பிரதேசத்தினை பெயரிடுக.
(a) கனெரி தீவுகள்
(b) பப்பூவா நியூகினியா
(c) மடகஸ்கார் **(3 புள்ளிகள்)**

(iii) (a) குறித்த ஒரு நாடு தீவாக அமைந்திருப்பதனால் எதிர்நோக்கும் **இரண்டு பாதகங்களை** குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

(b) சமுத்திர பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நாடானது சமுத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** பொருளாதார நடவடிக்கைகளை பெயரிக. **(3 புள்ளிகள்)**

**03**. (i) புவி வெப்பமடைவதற்கு காரணமான வளிமண்டலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஏதேனும் **இரு** வாயுக்களை பெயரிடுக **(2 புள்ளிகள்)**

(ii) புவி வெப்பமடைவதனால் ஏற்படக்கூடிய **மூன்று** பாதகமான விளைவுகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) உலக காலநிலை மாற்றத்தினை இழிவளவாக்குவதற்காக நீங்கள் பங்களிக்கக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை பெயரிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக. **(5 புள்ளிகள்**

04. (i) கீழே தரப்பட்டுள்ள இடர் வகைகளுக்கு ஒவ்வொரு **உதாரணம்** தருக.
(a) புவிசரிதவியல் ரீதியான இடர்
(b) உயிரியல் ரீதியான இடர் **(2 புள்ளிகள்)**

(ii) கீழே தரப்பட்டுள்ள சமுத்திர பிரதேசங்களில் உருவாகும் சூறாவளிகளுக்கு வழங்கப்படும் **பெயர்**களை சரியாக குறிப்பிடவும்.

(a) வட அத்திலாந்திக் கடல் பிரதேசம்

(b) வங்காள விரிகுடா சூழவுள்ள இந்து சமுத்திர பிரதேசம்

(c) பிலிப்பைன்ஸ் தீவுகளை சூழவுள்ள மத்திய பசுபிக் சமுத்திர பிரதேசம் **(3 புள்ளிகள்)**

(iii) அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின் படி, இலங்கையில் நிலச்சரிவு அனர்த்தத்தினை முகாமை செய்கையில்,

(a) நிலச்சரிவு இழிவளவாக்கவதற்கான **இரு** நடவடிக்கைகளையும்,

(b) பழைய நிலைக்கு மீளக்கொண்டு வருதலுக்கான **மூன்று** நடவடிக்கைகளையும், குறிப்பிடுக.
**(5 புள்ளிகள்)**

**05.** (i) புவியில் காணப்படக்கூடிய,

(a) புதுப்பிக்க முடியாத வளமொன்றினையும்,

(b) புதுப்பிக்க கூடிய வளமொன்றினையும் பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) கீழே அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பாறைகளிலிருந்து,
(காரியம்/ பசோல்ட் / நிலக்கரி /கப்ரோ / ஜிப்சம் / தொலமைட்)

(a) தீப்பாறை வகை

(b) அடையற் பாறை வகை

(c) உருமாறிய பாறை வகை
ஒவ்வொன்றினை தெரிந்து எழுதுக. **(3 புள்ளிகள்)**

(iii) சூழலிலுள்ள வளங்கள் மனிதனால் பெறுமதிமிக்க வளங்களாக மாற்றப்படும் **மூன்று** விதங்களை **இரு** உதாணங்களின் மூலம் விளக்குக. **(5 புள்ளிகள்)**

**06.** (i) (a) இலங்கையில் பாற்பண்ணை துறையை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள ஆராய்ச்சி **நிலையமொன்றினை** பெயரிடுக.

(c) இடைவெப்பவலய பிரதேசங்களில் பாற்பண்ணை உற்பத்தி அதிகளவில் பரம்பிக் காணப்படுவதற்கு பங்களித்த **ஒரு** காரணியைக் குறிப்பிடுக. **(2 புள்ளிகள்)**


(ii) இலங்கையில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள **மூன்று** நடவடிக்கைகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) பூகோள காலநிலை மாற்றம் விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் **மூன்று** பாதகமான தாக்கங்களை குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. **(5 புள்ளிகள்)**

**07.** (i) இலங்கையின் மின்வலு நிலையங்கள் சில படத்தில் ஆங்கில எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள்,

(a) சூரிய சக்தி வலு நிலையமொன்றினையும்,

(b) அனல் மின்சக்தி நிலையமொன்றினையும், எழுத்துடன் சரியாகப் பெயரிடுக.
**(2 புள்ளிகள்)**




(ii) வலுசக்தியை முறையாக பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) இலங்கையில் வலுசக்தி பயன்பாட்டின் போது எழும் **மூன்று** பிரச்சினைகளை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக. **(5 புள்ளிகள்)**

**08.** (i) இலங்கையின் 2024 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி,

(a) சனத்தொகை **கூடிய** மாவட்டத்தினையும்,

(b) சனத்தொகை **குறைந்த** மாவட்டத்தினையும், பெயரிடுக. **(2 புள்ளிகள்)**

(ii) சனத்தொகையின் சமமற்ற பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும்

(a) பௌதீக காரணியொன்றினையும்,

(b) மானிட காரணி இரண்டினையும், குறிப்பிடுக. **(3 புள்ளிகள்)**

(iii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக எழுந்துள்ள **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.
**(3 புள்ளிகள்)**

**අ.පො.ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2025 (2026)**
**G. C. E. Ordinary Level Examination - Model Paper - 2025 (2026)**

......................................

**භූගෝල විද්‍යාව I, II**
***புவியியல்* I, II**
**Geography I, II**

1· (අ) / (a)

i. ------------------------------------------------------------------------------------

ii. ------------------------------------------------------------------------------------

iii. ------------------------------------------------------------------------------------

iv. ------------------------------------------------------------------------------------

v. ------------------------------------------------------------------------------------

vi. ------------------------------------------------------------------------------------

vii. ------------------------------------------------------------------------------------


------------------------------------------------------------------------------------

viii. ------------------------------------------------------------------------------------

ix. ------------------------------------------------------------------------------------

10

(ආ)/(b)




N

(i) ☐

(ii) ☐


(iii) ☐

(iv) ☐

(v) ☐

/5

(ඉ)/(c)




N

(i) ☐

(ii) ☐

(iii) ☐

(iv) ☐

(v) ☐

/5

---

1. (අ) (a) /10 (ආ) (b) /5 (ඉ) (c) /5 = /20

ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව ජාතික භාෂා

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

**Ministry of Education, Higher Education & Vocational Education**

| 61 | II |
|---|---|


ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අ.පො.ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2025 (2026)

**G. C. E. Ordinary Level Examination - Model Paper - 2025 (2026)**

கல்வி பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - பயிற்சி வினாப்பத்திரம் - 2025 (2026)

## භූගෝල විද්‍යාව - Geography - புவியியல் - II




1:50,000

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2025 (2026)
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை - 2025 (2026)
General Certificate of Education (Ordinary Level) Examination - 2025 (2026)

# புவியியல்

## භූගෝල විද්‍යාව - Geography

**பயிற்சி வினாத்தாள்**
**අනුහුරු ප්‍රශ්න පත්‍රය**
**Practice Paper**



**விடைப்பத்திரம் - I, II | Answer Sheet - I, II | (தமிழ் மொழி மூலம்)**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය - ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு – தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு
Ministry of Education, Higher Education & Vocational Education - National Languages and Humanities Branch

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education & Vocational Education

| 61 | T | I, II |
|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை பயிற்சி வினாப்பத்திரம் - 2025 (2026)
අ.පො.ස. (සාමාන්‍ය පෙළ) විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2025 (2026)
G. C. E. Ordinary Level Examination – practice paper - 2025 (2026)

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும், விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## புவியியல் I

* **இவ்வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.**

* ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா வினாக்களுக்கும்** இவ்விடைத்தாளிலேயே விடை எழுதுக.

- **தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1 .புவிமேற்பரப்பிலிருந்து 5-6 கிலோமீற்றர் உயரத்திற்குள் காணப்படும் படையில், மொத்த வளி உள்ளடக்கத்தில்…… **50%**…… காணப்படுகிறது. (18%/50%/97%)

2. தென்னை செய்கையினை விருத்தி செய்வதற்கான தென்னை ஆராய்ச்சி நிறுவனம். …… **எம்பிலிபிடிய**…………….பிரதேசத்தில் அமைந்துள்ளது. (எம்பிலிபிடிய / ரன்ன / பத்தலகொட)

3. ''கைத்தொழில் கிராமங்கள்''……… **குடிசை**……………கைத்தொழில் விருத்திக்காக உருவாக்கப்பட்டவையாகும். (உற்பத்தி/ஏற்றுமதி /குடிசை )

4 .கரையோரத்திலிருந்து கடல்மைல் 24-200 வரையான வலயம்…….**தனித்துவ பொருளாதார வலயம்**…என அழைக்கப்படும். (தனித்துவ பொருளாதார வலயம் / நீர்ப்பிரி வலயம் / வெளிப்புற வலயம்)

5. தென்னாசிய பிராந்தியத்தில் மிக உயர்ந்த மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணை கொண்ட நாடு **…இலங்கை**…….ஆகும். (இந்தியா / இலங்கை / மாலைத்தீவுகள்)

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் "ச" ஐயும், பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

6. இலங்கையில் தற்போது இரண்டு சுரங்கங்களில் மாத்திரமே காரியம் அகழ்ந்தெடுக்கப்படுகிறது. (ச / பி)

7. பருவகால மாற்றங்களினால் இடைவெப்ப வலய பிரதேசங்களின் வெப்பநிலை கூடி,குறைகின்றது. (ச / பி)

8. ஒவ்வொரு கணியத்திற்கும் நிலையான இரசாயன சேர்க்கையொன்று காணப்படுகிறது. (ச / பி)


9. பாறைகளின் அடர்த்தி, கட்டமைப்பு மற்றும் அமைவிடம் என்பவற்றின் அடிப்படையில் புவியோடானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. (ச / பி)

10.பௌதீக வாழ்க்கைப் பண்பு சுட்டெண் என்பது ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் பழைய குறிக்காட்டியாகும். (ச / பி)

- **11 தொடக்கம் 16 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

11. இலங்கையின் சுற்றுலா அதிகார சபையினால் பிரதான சுற்றுலா வலயங்கள் **ஏழு/7**.இனங்காணப்பட்டுள்ளன.
12. கிரனைட் பாறையின் உருமாற்றத்தினால்…………**நைஸ்**………..பாறைகள் உருவாகின்றன
13. ……**உழைப்பு**………………..,சிறப்புத் தேர்ச்சி, தொழிநுட்ப அபிவிருத்தி என்பன பொருத்தும் கைத்தொழிலின் அடிப்படையாகும்.
14. ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் வாழும் மக்கள் தொகை …….**சனத்தொகை அடர்த்தி**…………….என அழைக்கப்படுகிறது.
15. மூடி பகுதியில் செயற்படுகின்ற…**மேற்காவுகை ஒட்டத்தின்**…….விளைவின் காரணமாக புவித்தகடுகள் நகருகின்றன.
16. சமுத்திரங்களுடன் தொடர்புபட்ட, முழுமையாக அல்லது பகுதியளவில் நிலத்தால் சூழப்பட்ட உவர்நீர்ப்பிரதேசம்………**கடல்**……….. என அடையாளப்படுத்தப்படும்.

- **கீழே தரப்பட்டுள்ள வரைபினை பயன்படுத்தி 17 தொடக்கம் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




**17.** 2023 ஆம் ஆண்டில் அதிகளவிலான சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்த மாதம்… **மார்ச……**ஆகும்.

**18.** 2025 ஆம் ஆண்டில் குறைந்தளவிலான சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்த மாதம்…..**மே**…..ஆகும்.

**19.** 2023 மற்றும் 2025 ஆண்டுகளின் சுற்றுலா பிரயாணிகளின் வருகைகளுக்கிடையிலான அதிகபட்ச வேறுபாடு…….**ஜனவரி**……..மாதத்தில் அவதானிக்கப்படுகிறது.

- **20 – 25 வரையுள்ள வினாக்களில் 'அ' இ 'ஆ' மற்றும் "ஆ" என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப 'ஆ' நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**20.**

| **'அ'**<br>**சனத்தொகை கூடிய வலயம்** | **'ஆ'**<br>**நாடு** |
|---|---|
| 1. தென்னாசியா | A. இந்தோனீசியா |
| 2. தென்கிழக்காசியா | B. சீனா |
| 3. கிழக்காசியா | C. ரஷ்யா |
| | D. பாகிஸ்தான் |

(1) A,D,B (2) B,C,A (3) C,A,B (4) D,A,B

(…**4**…)

**21.** **'அ'** **'ஆ'**

| **கனிய வகை** | **உதாரணம்** |
|---|---|
| 1. எரிபொருள் கனியம் | A. இரும்பு |
| 2. உலோகக் கனியம் | B. காரியம் |
| 3. உலோகமல்லாத கனியம் | C. சுண்ணக்கல் |
| | D. நிலக்கரி |

(1) B,A,D (2) C,B,A (3) D,A,C (4) D,B,C (…**3**….)

**22.** **'அ'** **'ஆ'**

| **நதி** | **ஆரம்பம்** |
|---|---|
| 1. றைன் | A. ஊற்றிலிருந்து |
| 2. நைல் | B. உருகிய பனியிலிருந்து |
| 3. தேம்ஸ் | C. ஏரியிலிருந்து |
| | D. மலைபகுதி ஊற்றிலிருந்து |

(1) A,C,B (2) B,C,A (3) C,B,D (4) D,C,A (…**2**….)

**23.** **'அ'** **'ஆ'**

| **சுற்றுலா வலயம்** | **நகரம்** |
|---|---|
| 1. புராதன நகரங்களின் வலயம் | A. கண்டி |
| 2. கிழக்கு கரையோரம் | B. ஹிக்கடுவை |
| 3. மத்திய மலைநாடு. | C. நுவரெலியா |
| | D. கதிர்காமம் |

(1) A,D,C (2) B,D,C (3) D,B,A (4) D,B,C (…**1**...)

**24.** **'அ'** **'ஆ'**

| **கவசத்தகடு** | **தீவு** |
|---|---|
| 1. இந்தோ-அவுஸ்ரேலியா | A. சுமாத்ரா |
| 2. பசுபிக் | B. ஹவாய் |
| 3. வட அமெரிக்கா | C. அந்தமான் |
| | D. போக்லண்ட் |

(1) A,B,D (2) B,C,A (3) C,A,D (4) D,C,B (…**3**….)

**25.** **'அ'** **'ஆ'**

| **வன சீவராசி ஒதுக்குகள்** | **பரம்பல் பிரதேசம்** |
|---|---|
| 1. இயற்கை ஒதுக்குகள் | A. வேதகிரியா கந்த |
| 2. வன ஒதுக்குகள் | B. நாகியாதெனியா |
| 3. தேசிய பூங்காக்கள் | C. புத்தல |
| | D. யால |

(1) A,B,C (2) B,C,D (3) C,A,B (4) D,C,A (…**1**….)

- **26 தொடக்கம் 37 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான/ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**26.** உலக உற்பத்தி கைத்தொழிலுடன் தொடர்புடைய சந்தை சார்ந்த பிரச்சினையை காட்டுவது.
(1) அதிக போட்டி காரணமாக பொருட்களின் விலையில் மாற்றம் ஏற்படுதல்.
(2) பல்தேசிய கம்பனிகளின் செல்வாக்கிற்கு உட்படுதல்.
(3) தொழிலாளர்களுக்கான செலவு அதிகரித்தல்
(4) நவீன இயந்திரங்களின் பயன்பாட்டினால் ஏற்படும் வேலைவாய்ப்பின்மை (…**1**….)

**27.** இலங்கையின் தனித்துவ பொருளாதார வலயத்திற்குள் மேற்கொள்ளப்படும் மீன்பிடி வகை.
(1) உவர்நீர் மீன்பிடி (3) நன்னீர் மீன்பிடி
(2) பல்லின மீன்பிடி (4) கடல் நீர் மீன்பிடி (…**4**….)

**28.** இலங்கையில் பெருமளவு நிலப்பரப்பில் நெற்பயிர்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டம்.
(1) நுவரெலியா (2) பொலன்னறுவை (3) குருநாகலை (4) அனுராதபுரம் (…**3**….)

**29**. மோட்டார் வாகன உற்பத்தி கைத்தொழிலின் முக்கிய போக்கினை குறிப்பிடும் விடை.
(1) குறைந்த முதலீட்டுடன் ஆரம்பிக்க முடிதல்
(2) பல நாடுகள் ஒன்றிணைந்து மேற்கொள்ளுதல்
(3) ஐரோப்பிய நாடுகள் மாத்திரம் உற்பத்தியில் ஈடுபடுதல்
(4) உற்பத்தி வழிமுறைகள் மாற்றமடைய நீண்டகாலம் எடுத்தல் (…**2**..)

**30**. தேயிலை உற்பத்தியில் முன்னணியில் திகழும் தென்னமெரிக்க நாடொன்று.
(1) பிரேசில் (2) சிலி (3) உருகுவே (4) ஆர்ஜெந்தீனா (…**4**..)

**31**. ஆபிரிக்க கண்டத்தில் இரண்டாம் நிலை சனத்தொகை மையமாக காணப்படும் பகுதி.
(1) கொங்கோ பள்ளத்தாக்கினை சூழவுள்ள பகுதி
(2) மத்திய சகாரா பகுதி
(3) எகிப்தின் கெய்ரோ சூழவுள்ள பகுதி
(4) ரியோடி ஜெனீரோ நகரை சூழவுள்ள பகுதி (…**3**….)

**32**. இலங்கையில் முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெற்றது.
(1) 1871 ( 2) 1881 (3) 1981 (4) 2012 (…**1**….)

**33**. நாடொன்றின் அபிவிருத்தி செயன்முறையில், மாற்று வளங்களை தேடவேண்டிய தேவை ஏற்படுவதற்கான காரணம்.
(1) புவி வெப்பமடைதல் அதிகரித்து வருதல்
(2) ஓசோன் படை தேய்வடைந்து வருதல்.
(3) வளப்பற்றாக்குறை ஏற்படுதல்
(4) வளங்கள் பொருளாதார ரீதியாக மதிப்பு வாய்ந்ததாக இருத்தல் (…**3**….)

**34.** 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பெரும் அழிவினை ஏற்படுத்திய பாரிய காட்டுத்தீ பரவியது.
(1) ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலம்
(2) கனடாவில் அல்பர்ட்டா
(3) அமேசன் காட்டுப்பிரதேசம்
(4) மத்திய அவுஸ்ரேலிய பிரதேசம் (…**1**….)

**35.** 1:50000 இடவிளக்கப்படத்தின் வெளி எல்லையின் மேல் ஓரத்தில் உள்ளடக்கப்படாத தகவல்.
(1) படத்தின் வகை (3) படத்தின் அளவுதிட்டம்
(2) படத்தின் இலக்கம் (4) படத்தின் பெயர் (…**3**…..)

**36.** இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிறுவன கட்டமைப்பு தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளது.
A. அனர்த்த முகாமைத்துவத்திற்கென ஒரு தனியான அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
B. பணிப்பாளர் நாயகம் ஒருவரின் தலைமையின் கீழ் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
C. கிராமிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன
D. அரசியல் தலைமைத்துவத்தினூடாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன
மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுக்கமைவாக,
(1) A,B, மற்றும் D மாத்திரம் சரியானவை (3) B மற்றும் C மாத்திரம் சரியானவை
(2) A மற்றும் D மாத்திரம் சரியானவை (4) B மற்றும் D மாத்திரம் சரியானவை (…**1**…..)

**37**. இலங்கையில் கட்டப்படுகின்ற படகுகள் ஏற்றுமதி செய்யப்படும் ஐரோப்பிய நாடொன்று.
(1) பிரான்ஸ் (2) நெதர்லாந்து (3) இத்தாலி (4) நோர்வே (…**4**.....)

- **A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து 38 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - 1. இயற்கை அனர்த்தங்கள்
2. மனித நடவடிக்கைகள்

B - 1. ஆயுள் எதிர்பார்ப்பு
2. வயது மூப்படைதல்

C - 1. பொருள் உற்பத்தி
2. பொருளின் விலை அதிகரிப்பு

D – 1. ஏற்றுமதி
2. இறக்குமதி

**38**. இரண்டாவதன் அதிகரிப்பு, முதலாவதன் வீழ்ச்சிக்கு காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…**3**...)

**39**. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிரகப்பிற்கு காரணமான சோடி.
(1) A (2) B (3) C (4) D (…**2**...)

**40.** இரண்டாவதன் தாக்கம் முதலாவதன் தீவிரமடைதலுக்கு காரணமான தலைப்பு சோடி.
(1) A (2) B (3) C (4) D (…**1**...)

ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி,உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education & Vocational Education**

| 61 | II |
|---|---|

අ.පො.ස. සාමාන්‍ය පෙළ විභාගය - අනුහුරු ප්‍රශ්න පත්‍රය - 2025 (2026)
**G. C. E. Ordinary Level Examination - Model Paper - 2025 (2026)**
கல்வி பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - பயிற்சி வினாப்பத்திரம் - 2025 (2026)

භූගෝල විද්‍යාව - **Geography** - புவியியல் - II




1:50,000

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education & Vocational Education

| 61 | T | I, II |
|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - பயிற்சி வினாப்பத்திரம்- 2025 (2026)
**G. C. E. Ordinary Level Examination - practice paper - 2025 (2026)**

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II |
| **புவியியல்** | **I, II** |
| **Geography** | **I, II** |

**புவியியல் II**

- ❖ இவ்வினாத்தாள் I II எனும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
- ❖ பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
- ❖ பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்
- ❖ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதல் வேண்டும்.

## பகுதி - I

1. **(அ) உமக்கு தரப்பட்டுள்ள 1:50000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்துக.**

- தொடக்கம் (v) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) Ⓐ எழுத்தினால் காட்டப்படும் எல்லை யாது?
(மாகாண எல்லை / மாவட்ட எல்லை / பிரதேச செயலக எல்லை) (1 புள்ளி)

(ii) Ⓑ எழுத்தினால் காட்டப்படுவது.
(நடைபாதை /சிறுவீதி / வண்டி பாதை) (1 புள்ளி)

(iii) Ⓒ எழுத்தினால் காட்டப்படும் வடிகால் அம்சம் யாது?
(கண்டல் நிலம் / ஆற்று வளைவு / சேற்றுநிலம்) (1 புள்ளி)

(iv) Ⓓ எழுத்தினால் காட்டப்படுவது.
(வீதி பாலம் / மதகு/ நடை பாலம்) (1 புள்ளி)

(v) Ⓔ எழுத்தினால் காட்டப்படும் கரையோர அம்சம்.
(முனை /மணற்றடை /குடா) (1 புள்ளி)

(vi) Ⓖ எழுத்தினால் காட்டப்படும் அம்சம் யாது? (1 புள்ளி)

(vii) Ⓗ சதுரத்தினுள் காணப்படும் இரு வணக்கஸ்தலங்களை பெயரிடுக.? (2 புள்ளிகள்)

- படப்பிரதேசம் தொடர்பான கூற்றுக்கள் **(viii)** மற்றும் **(ix)** வினாக்களில் தரப்பட்டடுள்ளன. கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் **"ச"** எனவும், பிழையாயின் **"பி"** எனவும் வினாக்களுக்கு எதிரே குறிப்பிடவும்..

(viii) படப்பிரதேசத்தின் நதிப்பள்ளதாக்கிற்கு அருகாமையில் பரந்தளவில் இறப்பர் பயிர்செய்கையை காணமுடிகிறது. (1 புள்ளி)

(ix) Ⓕ எழுத்தினால் காட்டப்படுவது தேசிய ஆள்கூற்று அளியடைப்பாகும். (1 புள்ளி)

**(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக எழுதுவதற்காக உலகப் புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

(i) தாய்வான் -Ⓢ, Ⓣ, Ⓤ

(ii) ஓப் நதி -Ⓜ, Ⓝ, Ⓞ

(iii) கருங்கடல் -Ⓥ, Ⓦ, Ⓧ

(iv) பமீர் மேட்டுநிலம் -Ⓒ, Ⓓ, Ⓔ

(v) சாட் ஏரி -Ⓟ, Ⓠ, Ⓡ **(5 புள்ளிகள்)**

**(இ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கை புறவுருவ படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் பயன்படுத்துக.**

- **(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக**

(i) ஏக்காலை -Ⓖ, Ⓗ, Ⓘ -

(ii) நெடுந்தீவு -Ⓐ, Ⓑ, Ⓒ

(iii) சம்பூர் -Ⓓ, Ⓔ, Ⓕ

(iv) ஓக்கம்பிடிய -Ⓞ, Ⓟ, Ⓠ

(v) ஜின் கங்கை -Ⓛ, Ⓜ, Ⓝ **(5 புள்ளிகள்)**


## பகுதி II

**02.** (i) பின்வரும் வரைபடத்தின் A மற்றும் B அம்சங்களை பெயரிடுக.

A - கண்ட மேடை

B – அகழி

**(சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**




(ii) கீழே தரப்பட்டுள்ள தீவுகள் அமையப்பெற்றுள்ள கடல் பிரதேசத்தினை பெயரிடுக.

(a) கனெரி தீவுகள் - அத்திலாந்திக் சமுத்திரம்

(b) பப்பூவா நியூகினியா - பசுபிக் சமுத்திரம்

(c) மடகஸ்கார் - இந்து சமுத்திரம்

**(சரியான பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 3 புள்ளிகள்)**

(iii) (a) குறித்த ஒரு நாடு தீவாக அமைந்திருப்பதனால் எதிர்நோக்கும் **இரண்டு பாதகங்களை** குறிப்பிடுக.

- சுனாமி அலைகளின் தாக்கம்
- கரையோர அரிப்பு
- சூறாவளிகளின் தாக்கம்
- மூலப்பொருட்கள், உணவு, மருந்து பொருட்கள் போன்றவற்றை கப்பல் அல்லது விமானத்தின் மூலம் இறக்குமதி செய்யவேண்டிய நிலை காணப்படுதல்.
- காலநிலை மாற்றத்தினால் அதிகளவு பாதிப்பை எதிர்நோக்குதல்.
  - ✓ கடல்மட்ட உயர்வு
  - ✓ உவர் தன்மை அதிகரித்தல்
  - ✓ கரையோரம் மூழ்குதல்.
  - ✓ விவசாய நிலங்கள் பாதிக்கப்படல்.

- பொருளாதாரம் மீன்பிடி, துறைமுகங்கள் மற்றும் சுற்றுலாத்துறையில் தங்கியிருத்தல்.
- சிறிய உள்நாட்டு சந்தை காணப்படுதல்.
- உலக அரசியலில் மட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கினை கொண்டிருத்தல்.
- வறையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள்.

**(இரண்டு பாதகங்களை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

(b) சமுத்திர பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நாடானது சமுத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** பொருளாதார நடவடிக்கைகளை பெயரிக.

- மீன்பிடிக்கைத்தொழில், கரையோர மீன்வளர்ப்பு, கடலுணவுற்பத்தி.
- சமுத்திரப் பகுதிகளிலிருந்து கனிய எண்ணெய், இயற்கை எரிவாயு பெற்றுக்கொள்ளல்.
- துறைமுகங்கள், கப்பல் கட்டுதல், சேவைகளை வழங்குதல் மற்றும் பராமரிப்பு போன்ற நடவடிக்கைகள்.
- கரையோர காற்றாலைகள், அலை சக்தி, மிதக்கும் சூரிய சக்தி தகடுகள் என்பவற்றின் மூலம் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்தல்.
- முருகைகற்பாறைகள், கணிய மணல், உப்பு உற்பத்தி, சமுத்திர உயிரியற் தொழினுட்பம்.
- சுற்றுலா கைத்தொழில்.

**(மூன்று பொருளாதார நடவடிக்கைகளை பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 3 புள்ளிகள்)**

**03**. (i) புவி வெப்பமடைவதற்கு காரணமான வளிமண்டலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஏதேனும் **இரு** வாயுக்களை பெயரிடுக.

- நைதரசன் ஒக்சைட்டு
- மீதேன்
- காபனீரொட்சைட்டு
- குளோரோ புளோரோக் காபன்.

**(இரண்டு சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

(ii) புவி வெப்பமடைவதனால் ஏற்படக்கூடிய **மூன்று** பாதகமான விளைவுகளை குறிப்பிடுக.

- முனைவு பனிக்கட்டிகள் உருகுதல், கடல் மட்டம் உயருதல்.
- களப்புகள் அழிதலும், நீர் உவரடைதலும்.
- சமுத்திர மேற்பரப்பு வெப்ப அதிகரிப்பால் சூறாவளி உருவாகுதல்.
- உயிரினங்கள் அழிந்து போதல்.
- விலங்குகளின் மரபணுக்களில் மாற்றம் ஏற்படுதல்.
- பயிர் நிலங்கள் சேதமடைதலும், விளைச்சல் குறைவடைதலும்.

**(சரியாக 3 விளைவுகள் குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 3 புள்ளிகள்)**

(iii) உலக காலநிலை மாற்றத்தினை இழிவளவாக்குவதற்காக நீங்கள் பங்களிக்கக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை பெயரிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக.

- பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்றுகின்ற சக்தி மூலங்களின் பயன்பாட்டினை குறைத்தல்
- புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலங்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.
- விவசாய நடவடிக்கைகளுக்காக இரசாயன பசளைக்கு பதிலாக சேதனப் பசளை பயன்பாட்டினை ஊக்குவித்தல்.
- திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்தல்.
- மீள்காடாக்கம்
- கலப்பு மற்றும் பல்லின பயிர்ச்செய்கை முறைமையை அறிமுகம் செய்தல்.
- பொது போக்குவரத்தினை பயன்படுத்தல்.
- 3R முறைமையை நடைமுறைபடுத்தல்.
- மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

**(மூன்று நடவடிக்கைகளை பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 3 புள்ளிகள்**
**(ஒன்றினை விளக்கியிருப்பின் - 2 புள்ளிகள்) (மொத்தம் 5 புள்ளிகள்)**

**04**. (i) கீழே தரப்பட்டுள்ள இடர் வகைகளுக்கு ஒவ்வொரு **உதாரணம்** தருக.

(a) புவிசரிதவியல் ரீதியான இடர்கள்
- புவிநடுக்கம்
- சுனாமி
- ஏரிமலை வெடிப்பு
- நிலச்சரிவு

(b) உயிரியல் ரீதியான இடர்கள்
- தொற்று நோய்கள்
- காட்டுத்தீ
- தாவர-விலங்குகள் அழிதல்

**(சரியான ஒரு உதாரணத்திற்கு 1 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

(ii) கீழே தரப்பட்டுள்ள சமுத்திர பிரதேசங்களில் உருவாகும் சூறாவளிகளுக்கு வழங்கப்படும் பெயர்களை சரியாக குறிப்பிடவும்.

(a) வட அத்திலாந்திக் கடல் பிரதேசம். - ஹரிக்கேன்
(b) வங்காள விரிகுடா சூழவுள்ள இந்து சமுத்திர பிரதேசம். - சூறாவளி
(c) பிலிப்பைன்ஸ் தீவுகளை சூழவுள்ள மத்திய பசுபிக் சமுத்திர பிரதேசம் - பாகியஸ்

**(சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் - 3 புள்ளிகள்)**

(iii) அனர்த்த முகாமைத்துவ வட்டத்தின் படி, இலங்கையில் நிலச்சரிவு அனர்த்தத்தினை முகாமை செய்கையில்,

(a) நிலச்சரிவு இழிவளவாக்கவதற்கான **இரு** நடவடிக்கைகள்.
- அபாய எச்சரிக்கை தொகுதிகளை நிறுவுதல்.
- மக்களை அறிவுறுத்துதல்.
- ஆபத்தான இடங்களை கண்டறிந்து,மக்களை அவ்விடங்களிலிருந்து அகற்றுதல்.
- அனர்த்தத்தை குறைக்கக்கூடிய கருவிகளை வழங்குதல்.
- அனர்த்த முகாமைத்துவ நிறுவனங்களை பலப்படுத்துதல்.

**(இரு நடவடிக்கைகளை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**

(b) பழைய நிலைக்கு மீளக்கொண்டு வருதலுக்கான **மூன்று** நடவடிக்கைகள்.
- பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லல்.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உணவு, சுத்தமான நீர், தங்குமிடம் வழங்குதல்.
- பாதிக்கப்பட்டவர்களை தேவையான மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்துதல்.
- பாதிக்கப்பட்டவர்களின் உளநலத்தினை சீரமைத்தல்.

**(மூன்று நடவடிக்கைகளை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**

**05.** (i) புவியில் காணப்படக்கூடிய,

(a) புதுப்பிக்க முடியாத வளமொன்று.
- சுவட்டு எரிபொருள்
- காடுகள்
  பாறைகள்
- வளமான மண்
- உலோகக் கனியங்கள் (இரும்பு,செம்பு,தங்கம்)
- உலோகமல்லாத கனியங்கள் (நிலக்கரி,பெற்றோல்,இரத்தினக்கல்,சிலிக்கா)

**(சரியாக ஒன்று பெயரிட்டிருப்பின் 1 புள்ளி)**

(c) புதுப்பிக்க கூடிய வளமொன்று.

- நீர்
- சூரிய ஒளி
- காற்று

**(சரியாக ஒன்றினை பெயரிட்டிருப்பின் 1 புள்ளி = மொத்தம் 2 புள்ளிகள்)**

(ii) கீழே அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பாறைகளிலிருந்து,
(காரியம்/ பசோல்ட் / நிலக்கரி /கப்ரோ / ஜிப்சம் / தொலமைட்)

(a) தீப்பாறை வகை. - பசோல்ட்/கப்ரோ **(சரியாக ஒன்று குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)**

(b) அடையற் பாறை வகை - நிலக்கரி/ஜிப்சம் **(சரியாக ஒன்று குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)**

(c) உருமாறிய பாறை வகை- நிலக்கரி/ஜிப்சம் **(சரியாக ஒன்று குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)**
**மொத்தம் 3 புள்ளிகள்)**

(iii) சூழலிலுள்ள வளங்கள் மனிதனால் பெறுமதிமிக்க வளங்களாக மாற்றப்படும் **மூன்று** சந்தப்பங்களை **இரு** உதாரணங்களின் மூலம் விளக்குக.

- பாறைகள். - உற்பத்தி கைத்தொழிலுக்கான மூலப்பொட்களாக பயன்படுத்தல், சிலை நிர்மாணத்திற்கு, வீதி கட்டமைப்பிற்கு.
- மண். - கட்டுமானங்கள், குடியிருப்புகள், பயிர்ச்செய்கை, கனிய அகழ்விற்கு.
- நீர். - நீர் மின் உற்பத்தி, போக்குவரத்து, விவசாயத்திற்கான நீர், ஆராய்ச்சிகள்
- காடுகள். - வெட்டு மர கைத்தொழில், தளபாட உற்பத்தி,சுற்றுலா கைத்தொழில்.

**(மூன்று சந்தர்ப்பங்களை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**
**(இரு உதாரணங்களின் மூலம் விளக்கியிருப்பின் 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**
**(மொத்தம் 3 புள்ளிகள்)**

**06.** (i) (a) இலங்கையில் பாற்பண்ணை துறையை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள ஆராய்ச்சி **நிலையம்.**

- அம்பேவெல
- கனன்வில **(சரியாக ஒன்று குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)**

(b) இடைவெப்பவலய பிரதேசங்களில் பாற்பண்ணை உற்பத்தி அதிகளவில் பரம்பிக் காணப்படுவதற்கு பங்களித்த **ஒரு** காரணி.

- புல்நிலங்கள்
- நீர்வசதி
- பயிற்றப்பட்ட தொழிலாளர்கள்
- புதிய தொழினுட்பம்
- பரந்த சந்தை வசதி. **(சரியாக ஒரு காரணி குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி)**

**(மொத்தம் 2 புள்ளிகள்)**

(ii) இலங்கையில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள **மூன்று** நடவடிக்கைகளை குறிப்பிடுதல்.

- தரமான பால் தரும் பசுக்களை வாங்குவதற்கு கடன் உதவிகளை வழங்குதல்.
- பிராந்திய பால் சேகரிப்பு நிலையங்களை நிறுவுதல்.
- பால் கொள்வனவிற்கான உத்தரவாத விலையை நிர்ணயித்தல்.
- சிறு பால் பண்ணையாளர்களுக்கான சங்கங்களை நிறுவுதல்.
- கால்நடை மருத்துவ சேவை வசதிகளை பெற்று கொடுத்தல்.
- விலங்குணவு, மற்றும் மருந்துகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- புதிய புல்லினங்களை (அல்பல்பா) அறிமுகப்படுத்தல்.


**(மூன்று நடவடிக்கைகளை சரியாக குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**

(iii) பூகோள காலநிலை மாற்றம் விலங்கு வளர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்படுத்தும் **மூன்று** பாதகமான தாக்கங்களை குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** விளக்குக.

- அதிகளவிலான மழைவீழச்சியினால் அதிகளவு தொற்றுநோய்கள் பரவுதல்.
- அதிக வரட்சியினால் ஏற்படும் நீர் பற்றாக்குறையினால் விலங்குகள் இறந்து போதல்.
- அதிக வெப்பத்தைத் தாங்கமுடியாமல் (Heat Strokes) விலங்குகள் இறத்தல்.
- வெப்ப அதிகரிப்பினால் விலங்குகளின் எடை மற்றும் இனப்பெருக்க ஆற்றலை பாதித்தல்.
- விலங்குகளுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கான அதிக செலவு.
- உற்பத்தி பொருட்களைப் பாதுகாப்பதில் சிரமம்.(இறைச்சி,பால்,முட்டை)
- மேய்ச்சல் நிலங்கள் அழிவடைதல்.
- புதிய தொற்றுநோய்கள் பரவுதல்.

**(மூன்று தாக்கங்களை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**
**(அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள்)**
**(மொத்தம் 5 புள்ளிகள்)**

**07.** (i) இலங்கையின் மின்வலு நிலையங்கள் சில படத்தில் ஆங்கில எழுத்துக்களில் காட்டப்பட்டுள்ளன.அவற்றுள்,




(a) சூரிய சக்தி வலு நிலையமொன்றினையும்,

D - பருதகந்த

**(எழுத்துடன் பெயரிட்டிருப்பின் 1 புள்ளி)**
**(எழுத்தினை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின் 1/2 புள்ளி)**
**(பெயரை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின் புள்ளி இல்லை)**

(b) அனல் மின்சக்தி நிலையமொன்றினையும், எழுத்துடன் சரியாகப் பெயரிடுக.

B - கெரவலபிடிய

**(எழுத்துடன் பெயரிட்டிருப்பின் 1 புள்ளி)**
**(எழுத்தினை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின் 1/2 புள்ளி)**
**(பெயரை மாத்திரம் குறிப்பிட்டிருப்பின் புள்ளி இல்லை)**

(ii) வலுசக்தியை முறையாக பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை குறிப்பிடுக.

- தேவையற்ற மின் விளக்குகள், மின்சாதனங்களை அணைத்து வைத்தல்.
- திறன்மிக்க மின்குமிழ்களை (LED) பயன்படுத்தல்.
- ஹய்பிரிட்(Hybrid) வகை வாகனங்களைப் பயன்படுத்துதல்.
- பழுதடைந்த மின்சாதனங்களின் பயன்பாட்டினை குறைத்தல் மற்றும் பழுதுபார்த்தல்.
- ஆதிக மின்சாரத்தினை நுகரும் மின்சாதனங்களின் (மின்னழுத்தி, குளிர்சாதனம், சலவை இயந்திரம்) பயன்பாட்டினை குறைத்தல்.
- புதுப்பிக்கக்கூடிய வலுசக்தி பயன்பாட்டினை அதிகரித்தல்
- பொதுப்போக்குவரத்து சேவையினை பயன்படுத்தல்.
- 3R முறைமையை செயற்படுத்தல்.

**(மூன்று நடவடிக்கைகளை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**

(iii) இலங்கையில் வலுசக்தி பயன்பாட்டின் போது எழும் **மூன்று** பிரச்சினைகளை குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை விளக்குக.

- அதிகரித்த வலுசக்தி கட்டணங்கள்
- செலவு அதிகரித்தல்
- இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புகள்
- வலுப்பயன்பாட்டின் போது ஏற்படும் வீண்விரயம்
- சிக்கனமான வலுசக்தி பயன்பாடு தொடர்பில் விழிப்புணர்வின்மை

- பழைய வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாட்டினால் எரிபொருள் நுகர்வு அதிகரித்தல்.
- புதுப்பிக்கக்கூடிய வலுசக்தியினை பெறுவதற்கான ஆரம்ப செலவு அதிகமாக காணப்படுதல்.

**(மூன்று பிரச்சினைகளை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**
**அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள்)**
**(மொத்தம் 5 புள்ளிகள்)**

**08**. (i) இலங்கையின் 2024 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பு அறிக்கையின்படி,

(a) சனத்தொகை **கூடிய** மாவட்டத்தினையும்,

- கம்பஹா

**(சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி)**

(b) சனத்தொகை **குறைந்த** மாவட்டத்தினையும், பெயரிடுக

- முல்லைத்தீவு

**(சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி)**
**மொத்தம் 2 புள்ளிகள்)**

(ii) சனத்தொகையின் சமமற்ற பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும்

(a) பௌதீக காரணியொன்றினையும்,

- காலநிலை
- நீர்
- தரைத்தோற்றம்
- இயற்கை வளங்கள்

**(இவற்றுள் ஒன்று சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி)**

(b) மானிட காரணி இரண்டினையும், குறிப்பிடுக.

- நகரமயமாக்கம்
- கைத்தொழில்மயமாக்கம்
- தொடர்பாடல்
- போக்குவரத்து

**(இவற்றுள் இரண்டு சரியாக பெயரிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 2 புள்ளிகள்)**
**(மொத்தம் 3 புள்ளிகள்)**

(iii) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக எழுந்துள்ள **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

- நகரபிரதேசங்களில் சன நெரிசல் அதிகரித்தல்
- வேலைவாய்ப்பு தொடர்பான சிக்கல்கள்
- சூழல் மீதான அழுத்தம் அதிகரித்தல்
- சூழல் மாசாக்கம் அதிகரித்தல்
- சமுக ஒற்றுமையின்மை அதிகரித்தல்.
- அரச செலவு மற்றும் பொருளாதார அழுத்தம் அதிகரித்தல்.
- ஊட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் ஏற்படும் சிக்கல்கள்
- வீட்டு வசதி பற்றாக்குறை/நகர்ப்புற சேரிகளின் வளர்ச்சி.
- ஒழுங்கற்ற அபிவிருத்தி
- போக்குவரத்து நெரிசல்
- குற்றச்செயல்கள் அதிகரித்தல்

**(மூன்று சிக்கல்களை குறிப்பிட்டிருப்பின் 1 புள்ளி வீதம் 3 புள்ளிகள்)**
**(அவற்றுள் ஒன்றினை விளக்கியிருப்பின் 2 புள்ளிகள்)**
**(மொத்தம் 5 புள்ளிகள்)**


# புவியியல் II

# Geography II

1· (அ)

| | | |
|---|---|---|
| I. | மாவட்ட எல்லை | 1 |
| II. | நடைபாதை | 1 |
| III. | சேற்றுநிலம் | 1 |
| IV. | மதகு | 1 |
| V. | முனை | 1 |
| VI. | அகன்ற புகையிரதபாதை | 1 |
| VII. | பௌத்த கோயில் | 1 |
| | கிறிஸ்த்துவ தேவாலயம் | 1 |
| VIII. | பி | 1 |
| IX. | பி | 1 |
| | | 10/10 |


(ආ)/(b)




N

| | |
|---|---|
| (i) | T |
| (ii) | O |
| (iii) | X |
| (iv) | D |
| (v) | P |
| | 5/5 |

(ඉ)/(c)




N

| | |
|---|---|
| (i) | G |
| (ii) | B |
| (iii) | D |
| (iv) | P |
| (v) | N |
| | 5/5 |

---

1. (අ) (a) $\frac{10}{10}$ (ආ) (b) $\frac{5}{5}$ (ඉ) (c) $\frac{5}{5}$ $= \frac{20}{20}$